<u>சுருக்கம்</u>

வேளாண்மை – தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க சார்புப் பணிகள் – உதவி வேளாண்மை அலுவலர் பணியிடத்தை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பிட – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (வேநி4(2)) துறை**

**அரசாணை (நிலை) எண். 31** **நாள் 11.02.2014**

**படிக்கப்பட்டது**

1. வேளாண்மை ஆணையரின் கடித எண். FSE1/53245/2012, நாள் 31.07.2012
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 7199/RND-C1/2012, நாள் 20.12.2012

------

**ஆணை:**

வேளாண்மை ஆணையர் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், உதவி வேளாண்மை அலுவலர் காலிப்பணியிடம் 2011–12 ஆண்டிற்கு 417 என்று மதிப்பீடு செய்து அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நேரடி நியமனம் செய்ய உத்தரவிடப்பட்டது என்றும் 2009 மற்றும் 2011–ம் ஆண்டுகளில் நடப்பிலுள்ள விதிமுறைகளின்படி மேற்படி உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் வேலைவாய்ப்பகம் மூலம் நேரடியாக நிரப்பப்பட்டது என்றும் தற்போது திறமையான, மேம்பட்ட மற்றும் இளையோருக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் போட்டித் தேர்வு மூலம் தொழில் முறை அனுபவமிக்க அமைப்பான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மேற்கொண்டால் சிறப்பாக அமையும் என்றும், மேலும் மாநில முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான தகுதியானவர்கள் அனைவரும் பங்கேற்கும் விதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு மேற்கொள்வது உகந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்து, உதவி வேளாண்மை அலுவலர் பணிநியமனத்தினை தமிழ்நாடு தேர்வாணையத்தின் எல்லைக்குள் கொண்டு வந்து மேற்கண்ட 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயைத்தின் மூலம் நிரப்பிட ஆணை வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளார்.

2. இதுகுறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையத்தின் ஆலோசனை கோரப்பட்டதில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்படி உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை தேர்வாணையத்தின் எல்லைக்குள் கொண்டுவந்து, மேற்கண்ட 417 உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பிட தனது இசைவினை அளித்துள்ளது.

3. மேற்காணும் சூழ்நிலையில், வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்ததில், வேளாண்மைத் துறையின் கீழ் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்குள் கொண்டு வந்து, அப்பணியிடங்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பிடலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முனைவர் சந்தீப் சக்சேனா**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3
வேளாண்மை இயக்குநர், சென்னை – 5.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை – 9
மாநிலக் கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை – 18.
**நகல்**
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் முதன்மை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அனைத்துப் பிரிவுகள், வேளாண்மைத் துறை, சென்னை – 9.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**